என்ற கோரிக்கைக்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

118--

இறால் வளர்ப்புப் பயிற்சி அளித்தல்

***84880** **திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம் விவசாயிகளுக்கு இறால் வளர்ப்புப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்ட விவசாயிகளுக்கு இறால் வளர்ப்புப் பயிற்சி அளிக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 11–25

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டம் வானம் பார்த்த பூமியாக இருக்கிறது. மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும். அதனால், குளம், குட்டைகள் வெட்டி இறால் வளர்க்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பி.எப்.டி.ஏ.' என்று சொல்லக்கூடிய கடல் இறால் வளர்க்கிற உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் 5 மாவட்டங்களில் கடல் இறால் எப்படியெல்லாம் வளர்க்கலாம் என்கிற ஒரு பயிற்சி அந்த நிறுவனத்தின் மூலமாக அளிக்கப்படுகிறது. அதே போன்று நன்னீர் இறால் வளர்ப்பதற்கு 'மெரைன் பிராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி' என்ற மத்திய அரசின் நிறுவனம் மூலமாக மண்டல அலுவலகத்தின் மூலமாக நன்னீர் இறால் வளர்ப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு பயிற்சித் தொகையும் மற்றும் பயிற்சிக்கு வேண்டிய உதவியும் இந்த நிறுவனத்தின் மூலமாக அளிக்கப்படுகிறது. தேவையான பயிற்சியை

1996 பிப்ரவரி 23]

அங்கே பெற்றுக்கொள்ளலாம். மேலும் வடாற்காடு மாவட்டத்தில் எங்கெல்லாம் நிலத்தடி நீர் இருக்கிறதோ அந்த நிலத்தடி நீரைப் பெற்று மீன் வளர்ப்பதற்கு வேண்டியவைகளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூறுவாரெனில் அந்த நிலத்தை ஆய்வு செய்து, மீன்வளர்ப்பதற்கு ஏற்ற இடமா என்று ஆய்வு செய்து, வங்கிக்குப் பரிந்துரை செய்து மீன் வளர்ப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 119, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

119--

புதுமாரியம்மன் கோவிலைத் தனியார் வசம் ஒப்புவித்தல்

**26651--திருமதி கவிநிலவு தர்மராஜ்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி அருள்மிகு புதுமாரியம்மன் கோவிலை மீண்டும் தனியார் வசம் ஒப்புவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம், கொடுமுடி அருள்மிகு புதுமாரியம்மன் திருக்கோயிலை மீண்டும் தனியார் வசம் ஒப்புவிக்க இயலாது.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடியிலுள்ள அருள்மிகு புதுமாரியம்மன் திருக்கோவில், தனிப்பட்ட ஒரு குடும்பத்தினரால் கட்டப்பட்டு பரம்பரை பரம்பரையாக அந்தக் குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிற ஒரு கோவிலாகும். அந்தக் கோவில், பங்காளிகளுக்குள் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அரசு தலையிட்டு, அந்தக் கோவிலை அரசு எடுத்து அதனுடைய நிர்வாகத்தின் கீழ் வைத்திருக்கிறது. அதனால் பல ஆண்டுகளாக கோவிலினுடைய அறக்கட்டளை தாரர்களாக விளங்கிய அந்தக் குடும்பத்தினுடைய பல்வேறு நிகழ்ச்சிகள், இந்தக் கோவிலை